செய்தி வெளியீடு எண் : 05 நாள் :04.12.2020

**தேனி மாவட்டம்**

**மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள் ரூ.162.43 கோடி மதிப்பீட்டில் ஆண்டிபட்டி, கடமலைக்குண்டு - மயிலாடும்பாறை மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான கட்டுமானப்பணியினை துவக்கி வைத்தார்:-**

********

மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. ஓ.பன்னீர்செல்வம் அவர்கள், தேனி மாவட்டம், ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட பந்துவார்பட்டி பிரிவு - திருமலாபுரம் அருகில் இன்று (04.12.2020) மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ம.பல்லவி பல்தேவ், இ.ஆ.ப., அவர்கள் முன்னிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையின் கீழ் செயல்படும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் சார்பில் 162 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் ஆண்டிப்பட்டி, கடமலைக்குண்டு - மயிலாடும்பாறை மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான கட்டுமானப்பணியினை துவக்கி வைத்தார்.

மாண்புமிகு அம்மா அவர்களின் தமிழக அரசு இடையறாத வளர்ச்சியின் அம்சமாக விளங்கும் நகர்புறம் மற்றும் கிராமப்புறங்களை தூய்மையாகவும், குடிநீர், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை போன்றவற்றை உள்ளடக்கிய வசதிகள் கொண்டவையாகவும் இருப்பதற்கு தேவையான திட்டங்களை தொலை நோக்குப் பார்வையுடன் செயல்படுத்தி வருகிறது. அதனடிப்படையில் தமிழகத்தில் வாழும் அனைத்து மக்களுக்கும் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றான பாதுகாக்கப்பட்ட குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்பதனை கருத்தில் கொண்டு, பல்வேறு திட்டங்களை தீட்டி செயல்படுத்தி வருகிறது.

அதனடிப்படையில், தேனி மாவட்டத்தில் அனைத்து பகுதிகளிலும் குடிநீர் தேவைகளை பூர்த்தி செய்யும் பொருட்டு, பல்வேறு நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட்டு, நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. அதன்படி, ஆண்டிபட்டி மற்றும் கடமலை-மயிலாடும்பாறை ஆகிய ஊராட்சி ஒன்றியங்களுக்குட்பட்ட பகுதிகளில் கோவில்பாறை, சின்னசுருளி, குமணன்தொழு, மயிலாடும்பாறை, ஜங்கால்பட்டி, ஆத்தங்கரைப்பட்டி, கண்டமனூர், வள்ளல்நதி, அரப்படிதேவன்பட்டி, பாலகோம்பை ஆகிய 10 கூட்டு குடிநீர் திட்டத்தின் கீழ் தினந்தோறும் 9.50 மில்லியன் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது.

அதனைத்தொடர்ந்து, இப்பகுதிகளில் கூடுதலாக குடிநீர் வழங்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கடந்த 07.03.2018 அன்று நடைபெற்ற மாவட்ட ஆட்சித்தலைவர்கள் மற்றும் காவல்துறை அதிகாரிகள் மாநாட்டில், “ஆண்டிப்பட்டி மற்றும் மயிலாடும்பாறை” ஒன்றியங்களில் விடுபட்டுப் போன பகுதிகளுக்கு வைகை அணைக்கு கீழ் பகுதியிலிருந்து புதிய கூட்டுக் குடிநீர் அமைக்க ஆய்வு மேற்கொள்ளப்படும்”” என தமிழக அரசால் அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பிற்கிணங்க, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலமாக 162 கோடியே 43 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில், தேனி மாவட்டம் ஆண்டிப்பட்டி, கடமலைக்குண்டு - மயிலாடும்பாறை மற்றும் தேனி ஊராட்சி ஒன்றியங்களிலுள்ள 250 ஊரகக் குடியிருப்புகளுக்கான கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் ஆகியோர்களால் கடந்த 04.11.2020 அன்று காணொலிக் காட்சியின் மூலமாக அடிக்கல் நாட்டப்பட்டது.

அதனைத்தொடர்ந்து, இக்கூட்டுக் குடிநீர் திட்டத்திற்கான கட்டுமானப்பணிகளை துவக்கி வைக்கும் பொருட்டு, மாண்புமிகு தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள், இன்றைய தினம் ஆண்டிபட்டி வட்டத்திற்குட்பட்ட பந்துவார்பட்டி பிரிவு - திருமலாபுரம் அருகில் இத்திட்டத்திற்கான கட்டுமானப்பணிகளை துவக்கி வைத்தார்.

இக்கூட்டுக்குடிநீர் திட்டத்திற்கான இயல்பு நீர் வைகை அணையின் கீழ்பகுதியில் மீட்பு சிற்றணையிலிருந்து மேல்பகுதியில் 6 மீட்டர் விட்டமுள்ள கிணறு மூலம் சேகரிக்கப்பட்டு, பின்னர் அசல் நீர் உந்து குழாய்கள் மூலம் கோவில்பட்டி கிராமம் அருகில் அமைக்கப்படவுள்ள 10.70 மில்லியன் லிட்டர் கொள்ளவுள்ள குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்டு, 432.605 கி.மீ நீர் உந்து குழாய்கள் மூலம் புதிதாக அமைக்கப்படவுள்ள 40 எண்ணம் தரைமட்ட நீர்தேக்கத்தொட்டியின் மூலம் சேர்க்கப்பட்டு, பயனாளிகளுக்கு ஏற்கனவே அமைந்துள்ள மேல் நீர்தேக்கத்தொட்டி மற்றும் புதிதாக இத்திட்டத்தின் கீழ் கட்டப்படவுள்ள 41 எண்ணம் மேல் நீர்தேக்கத்தொட்டிகள் மூலம் ஏற்கனவே அமைந்துள்ள பதிர்மான குழாய்கள் மற்றும் புதிதாக அமைக்கப்படவுள்ள 24.50 கி.மீ நீளமுள்ள குழாய்கள் மூலம் பொதுமக்களுக்கு குடிநீர் விநியோகிக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், இத்திட்டம் முடிவுறும் தருவாயில், தற்கால 2021 மக்கள் தொகையின்படி 1.40 இலட்சம் மக்களுக்கு 7.90 மில்லியன் லிட்டர், இடைக்கால 2036 மக்கள் தொகையின்படி 1.58 இலட்சம் மக்களுக்கு 9.30 மில்லியன் லிட்டர் மற்றும் உச்ச கால 2051 மக்கள் தொகையின்படி 1.78 மக்களுக்கு 10.70 மில்லியன் லிட்டர் பாதுகாக்கப்பட்ட குடிநீர் நாள் ஒன்றுக்கு வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வின் போது, கம்பம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.டி.கே.ஜக்கையன், மாவட்ட வருவாய் அலுவலர் க.ரமேஷ், பெரியகுளம் சார் ஆட்சியர் டி.சிநேகா, இ.ஆ.ப., மாவட்ட ஊராட்சித்தலைவர் க.ப்ரிதா, ஆண்டிபட்டி ஊராட்சி ஒன்றிய குழுத்தலைவர் அ.லோகிராஜன், துணைத்தலைவர் டி.ஆர்.என்.வரதராஜன், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய செயற்பொறியாளர் ஆர்.துரைக்கண்ணன் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், தேனி.**